நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 2, மேட்டூர்.

## CC. No. 237/2022

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மார்ட்டின் செல்வம் |
| தந்தை / கணவர் பெயர் | : | சூசைநாதன் |
| கிராமம் | : | |
| வட்டம் | : | |
| மாவட்டம் | : | |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜூலை மாதம், 20 –ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 1.26 PM

1. நான் தற்போது சேலம் கிச்சிபாளையத்தில் குடியிருந்து உள் அலங்கார வேலை செய்து வருகிறேன். கடந்த 7.11.2021 ம் வருடம் நாங்கள் எங்கள் குடும்பத்துடன் மேட்டூர் முனியப்பன் கோவிலுக்கு சாமி கும்பிட வந்தோம். எங்கள் குடும்பத்தில் மொத்தம் 8 பேர். ஒரு ஷேர்ஆட்டோவிலும், பைக்கிலும் சென்றோம்.

2. சாமி கும்பிட்டுவிட்டு மாலை சுமார் 6.30 மணிமுதல் 7.00 மணியளவில் மேச்சேரி காளியம்மன் கோவில் அருகே நாங்கள் பைக்கில் வந்துக்கொண்டிருந்தபோது எங்கள் பின்னால் வந்த எண். TN 30 S 3999 என்ற பதிவெண் கொண்ட லாரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்து, ஹாரன் அடிக்காமல் எங்கள் பைக் மீது மோதியது. அதனால் நாங்கள் கீழே விழுந்துவிட்டோம்.

3. அப்பொழுது என்னுடைய மாப்பிள்ளை லாரியின் பின்சக்கரத்தில் விழுந்துவிட்டார். லாரியின் பின்சக்கரம் எனது மாப்பிள்ளையின் தலையில் ஏறியதால் அவர் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். இடித்த லாரி நிற்காமலேயே சென்றுவிட்டது. எனக்கும் அந்த விபத்தில் காயம் ஏற்பட்டது. விபத்து நடந்தவுடனேயே போலீசார் அங்கு வந்துவிட்டார்கள்.

4. எங்களை போலீசார் ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். ( **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) சம்பவம் என் முன்னால்தான் நடந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. எனக்கு இந்த விபத்தில் எங்கெங்கு காயம் ஏற்பட்டதென்றால் கை மற்றும் நெஞ்சிலும் காயம் ஏற்பட்டது. சம்பவம் நடந்து அரைமணிநேரம் கழித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரை போலீசார்தான் தயார் செய்தார்கள். நான் படித்துபார்த்து கையொப்பம் செய்தேன்.
2. புகாரில் எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்று நான் சொல்லவில்லை. அவ்வாறு சொல்லியிருந்தால் அது தவறு. எனக்கு உள் அடி மட்டும் பட்டது. எனக்கு இருச்சக்கர வாகனத்தை ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை. விபத்து நடந்த சமயத்தில் நான் ஓட்டிய இருச்சக்கர வாகனத்தில் 3 பேர் பயணம் செய்தோம் என்றால் சரிதான்.
3. எங்களுடைய இருச்சக்கர வாகனத்தின் பின்பக்கம், லாரியின் முன்இடதுப்பக்கம் வந்து மோதியது. எங்களுடைய இருச்சக்கர வாகனத்தில் எங்கெங்கு சேதாரம் ஏற்பட்டது என்றால் முன்புறம் முகப்பு விளக்கு, எரிபொருள் டேங்க்கிலும்

அடிப்பட்டது. பொதுவாக முன்னால் செல்லும் இருச்சக்கர வாகனத்தின் பின்புறம் லாரி அதிவேகமாக மோதினால் பின்புறம் கட்டாயம் சேதம் ஏற்பட்டிருக்கும் என்றால் சரிதான். ஆனால் இந்த சம்பவத்தில் அவ்வாறு நடக்கவில்லை. எனது வாகனத்தின் சைலன்சர் பகுதியில்தான் லாரி மோதியது.

4. எங்கள் மீது மோதிய லாரி 12 சக்கர லாரியாகும். என்னுடன் வந்தவர் லாரியின் கடைசியாக உள்ள பின்சக்கரத்தில்தான் அடிப்பட்டார். பொதுவாக முன்னாடி செல்லும் இருச்சக்கர வாகனத்தில் அதிவேகமாக ஒரு லாரி பின்புறமாக மோதும்போது முன்சக்கரத்தில்தான் அடிப்பட வாய்ப்புள்ளது என்றாலும் கடைசியாக உள்ள பின்சக்கரத்தில் அடிப்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல.
5. நான்தான் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் 3 நபர்களை வைத்துக்கொண்டு நிலைத்தடுமாறி லாரியின் பின்சக்கரத்தில் நானாக மோதிவிட்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய அஜாக்கிரதையால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஒரு லாரி அதிவேகமாக எங்களுடைய இருச்சக்கர வாகனத்தில் மோதியிருந்தால் வாகனத்தின் பின்புறம்தான் சேதமாகியிருக்கும் என்றாலும் நான் சொன்னவாறு விபத்து நடக்காததால்தான் மோட்டார் வாகன ஆய்வாளர் எனது இருச்சக்கர வாகனத்திற்கு பின்புறம் சேதங்கள் எதுவும் இல்லை என்று சான்று அளித்துள்ளார் என்றாலும் லாரிக்கு எந்த சேதமும் இல்லை என்றும் சான்று வழங்கியுள்ளார் என்றாலும் சரியல்ல.
6. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்போது இந்த விபத்தில் சம்மந்தப்பட்டததாக நான் சொல்லும் லாரி, காவல் நிலையத்தில்தான் இருந்தது என்றால் சரிதான். மகாலட்சுமி என்பவர் எனது வீட்டின் அருகில் குடியிருப்பவர். புவனேஸ்வரி என்பவர் எனது மனைவி. இருவரும் விபத்து நடந்து கால்மணிநேரம் கழித்து வந்தார்கள்.
7. நான் சொல்வதுபோல் சொல்லும் விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் லாரி ஓட்டுநரின் அஜாக்கிரதையினால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. விபத்து இழப்பீடு பெறுவதற்காக லாரி ஓட்டுநர் மீது தவறுதலாக நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 1.50 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**

நீதித்துறை நடுவர் எண்.2,மேட்டூர்.